**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இ.ம.எண். 4/2024**

**இன்**

**அ.வ.எண்.110/2010**

த. பூவேந்தன் ----- மனுதாரர் /வாதி

/எதிர்/

1. சக்திவேல் (இறப்பு)
2. எஸ். மாலதி
3. எஸ். பிரியங்கா
4. மைனர் எஸ். ஹர்சினி

(மேற்படி மைனர் 4-ம் பிரதிவாதிக்கு
தாயாரும் கார்டியனுமான 2-ம் பிரதிவாதி
எஸ். மாலதி மூலம்) ----- எதிர்மனுதாரர்கள்/1, 2, 3, 4 பிரதிவாதிகள்

5. ரவி ----- புதிய தரப்பினர்/5-ம் பிரதிவாதி

இந்த மனுவானது 21.03.2024 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் R.கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 4 எதிர்மனுதாரர்கள்/1, 2, 4 பிரதிவாதிகள் மற்றும் புதிய தரப்பினர்/5-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் M.முகம்மது யூசுப்ராஜா அவர்கள் முன்னிலையாகியும், 3-ம் எதிர்மனுதாரர்/3-ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் ஒருதரப்பாக இருந்தும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

தாவா சொத்தை கிரையம் பெற்ற ரவி என்பவரை இந்த அசல் வழக்கில் 5-ம் பிரதிவாதியாக சேர்த்து இந்த அசல் வழக்கை மேல்நடத்த உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் ஆர்டர் 1 ரூல் 10(2) மற்றும் பிரிவு 151-ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி அசல் வழக்கானது 1-ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கு நிலுவையில் இருந்தபோது 07.06.2007 அன்று 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டபடியால் அவரது வாரிசுகளைச் சேர்த்து வழக்கை மேல்நடத்த நடவடிக்கை எடுத்து வந்த நிலையில் வாரிசுகளை சேர்க்கப்பட்டு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது. 2, 3, 4 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் முன்னிலையான பிறகு 04.08.2023 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்தனர். எதிர்வழக்குரையில் 08.06.2016 அன்று வழக்குச் சொத்தை ரவி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன ரவி என்பவரை சேர்த்து வழக்கை நடத்தி தீர்ப்பைப் பெற்றால் மட்டுமே தீர்ப்பின் பயனை அடைய இயலும். எனவே மேற்சொன்ன ரவி என்பவரை அசல் வழக்கில் 5-ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடவேண்டும்.

**3. 2-ம் எதிர்மனுதார/2-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 4-ம் எதிர்மனுதாரர்/4-ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் பின்வருமாறு:-**

மனுதாரரின் மனு பொய்யானது. நிலைநிற்கத்தக்கதல்ல. வழக்குச் சொத்துக்களும், இதரச் சொத்துக்களும் 1-ம் பிரதிவாதிக்கு 27.03.2006 ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படியும், 1-ம் பிரதிவாதியின் தாயாரான பெருமாளம்மாள் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின்படியும் பாத்தியம். 1-ம் பிரதிவாதி கடந்த 10.09.2006 அன்ற வழக்குச் சொத்துக்களையும், இதரச் சொத்துக்களையும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு உயில் சாசனம் எழுதிவைத்திருந்தார். 1-ம் பிரதிவாதிக்கு 07.06.2007 அன்று 2 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். வழக்குச் சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டிருந்தது. 08.06.2016 அன்று சோழவந்தானைச் சேர்ந்த ரவி என்பவருக்கு தாவா சொத்துக்களையும், இதரச் சொத்துக்களையும் கிரையம் செய்து அன்றையதினமே சுவாதீனமும் கொடுத்துவிட்டனர். இந்நிலையில் ரவியின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து கிஸ்தி செலுத்தப்பட்டு அவரது அனுபவத்தில் சொத்துக்கள் இருந்து வருகிறது. 1-ம் பிரதிவாதி வழக்குச் சொத்தைப் பொறுத்து 05.01.2007 ஆம் தேதி பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்ததாகச் சொல்வது உண்மையல்ல. அது தீய நோக்கத்துடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1-ம் பிரதிவாதி வழக்குச் சொத்தைப் பொறுத்து எவ்வித கிரைய உடன்படிக்கையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அதில் சொல்லப்பட்டுள்ள தொகையை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளவில்லை. அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் 1-ம்

பிரதிவாதியுடையதல்ல. கிரைய உடன்படிக்கையில் 3-வது பக்கத்தில் எழுதிக்கொடுக்கப்பட்டவர் என்ற இடத்தில் கையொப்பம் இல்லை. சாட்சிகளின் தகப்பனார் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படவில்லை. 06.04.2007 ஆம் தேதியிட்ட பதில் அறிவிப்பில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மையல்ல. அவ்வாறான பதில் அறிவிப்புக்கு எவ்விதத் தகவலும் 1-ம் பிரதிவாதியால் சொல்லப்படவில்லை. அந்த தேதியில் 1-ம் பிரதிவாதி உடல்நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக சிகிச்சை பெற்று வந்தார். அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 14 ஆண்டுகள் ஆன நிலையில் அசல் வழக்கை விரைவாக நடத்துவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. வாதி அசல் வழக்கை பலமுறை தள்ளுபடிக்கு விட்டுள்ளார். எனவே மனு தள்ளுபடியாக வேண்டும்.

**4. 5-ம் எதிர்மனுதாரர்/5-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரரின் மனு பொய்யானது, நிலைநிற்கத்தக்கதல்ல. வழக்குச் சொத்துக்களும், பிற சொத்துக்களும் 1-ம் பிரதிவாதிக்கு 27.03.2006 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை மற்றும் 1-ம் பிரதிவாதியின் தாயார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆகியவற்றின்படி பாத்தியப்பட்டு அனுபவித்து வரப்படுகிறது. 10.09.2006 அன்று வழக்குச் சொத்துக்களையும், இதரச் சொத்துக்களையும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1-ம் பிரதிவாதி உயில் எழுதிக்கொடுத்துள்ளார். 07.06.2007 அன்று 1-ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். குடும்பக் கடன் தீர்ப்பதற்காகவும், நீதிமன்றத் தீர்ப்பாணையில் கண்ட கடனை சாட்டுதல் செய்தும், 5-ம் எதிர்மனுதாரருக்கு வழக்குச் சொத்தானது 08.06.2016 அன்று கிரையம் செய்து கொடுக்கப்பட்டது. அசல் வழக்கில் சொல்லப்பட்டுள்ள கிரைய உடன்படிக்கை மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் 1-ம் பிரதிவாதியுடையதல்ல. 1-ம் பிரதிவாதியின் பெயரிலான பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் உண்மையல்ல. அந்தத் தேதியில் 1-ம் பிரதிவாதி படுத்த படுக்கையாக சிகிச்சை பெற்று வந்தார். அசல் வழக்கை நடத்த தற்போது வரை வாதி எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. 5-ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. எனவே மனுவைத் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

5. இந்த மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

6. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**7. தீர்வு:-**

7.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் 04.08.2023 அன்று தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை

08.06.2016 அன்று வழக்குச் சொத்துக்களையும், பிற சொத்துக்களையும் ரவி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது என்றும், எனவே மற்படி ரவி என்பவரை 5-ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன ரவி என்பவருக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கு நிலுவையில் இருக்கும்போது கிரையம் ஏற்படுத்தி கொடுத்துள்ள நிலையில், அவரையும் தரப்பினராகச் சேர்த்து இருபுறமும் கேட்டு வழக்கை நடத்துவதே சரியானது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.04.03 18:09:29 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>**

**இல்லை**

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

**இல்லை**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.04.03 18:09:34 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

இ.ம.எண்.4/2023

இன்

அ.வ.எண்.110/2010

______________ உத்தரவு

நாள் : 01.04.2024